**கிராமப்புறத்தில் கணிணி மயம் - ரானே கல்வி நிறுவனங்கள்**

காவிரி ஆறு, பச்சைப் பசைலென்று வயல்கள், அழகான மலைகள் என திருச்சியை சுற்றிலும் அழகு. இதன் நடுவில் கல்வி கற்பது என்பது அருமையான அனுபவம். பாடத்திட்டங்கள் மற்றும் உரிய கட்டிட அமைப்பு மிகவும் உயரியதாய் இருந்தால் அத்தகைய கல்வி சாத்தியமே. அப்படிப்பட்ட ஒரு இடம்தான் ரானே நிறுவனங்களுக்குச் சொந்தமான பாலிடெக்னிக் கல்லூரி, சேதுராப்பட்டி மற்றும் ரானே வித்யாலயா, CBSE, மண்ணச்சநல்லூர், திருச்சி ஆகிய இரண்டு இடங்களுமே நல்ல இயற்கை காட்டோற்ற சூழல்நிறைந்த வளாகங்கள். கற்பித்தலில் இந்த இரண்டு இடங்களிலும் உலகத்தரம் உள்ளது. எடுத்துக்காட்டாக 2020 ஆம் ஆண்டு நோய்த்தொற்று சூழல் காலங்களிலும் கூட இரண்டு நிறுவனங்களும் ஆன்லைன் கூகுள் வகுப்பு மூலமாக பாடங்களை எடுத்து மாணாக்கர்களுக்கு உறுதுணையாக இருந்தது. அந்தப் பாடங்கள் You Tube களிலும் சேமிக்கப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டுக்கு இருக்கிறது. அதன் கல்வி நிறுவனத்தைச் சார்ந்த ஆசிரியர்களில் ஒருவர் IISER, Pune சார்பாக “Share Your Best Lesson Plan” என்ற தலைப்பில் நடைபெற்ற போட்டியில் “Excellent Award” பெற்று அந்நிறுவனத்திற்கு பெருமை சேர்த்தார். ரர்னே குழுமத்தின் கல்வி ஈடுபாடு 1930 களிலேயே துவங்கியது. அக்குழுமத்தின் நிறுவனர் திரு.கணபதி ஐயர் அவர்கள் தாமாகவே முன்வந்து மைலாப்பூரில் உள்ள பெண்கள் பள்ளிக்கு உதவினார். அந்த காலகட்டத்திலேயே அவரது இல்லம் அந்தப்பள்ளிக்கு தானமாக கொடுக்கப்பட்டது. அந்நிறுவனம் அவரது பெயரிலேயே செயல்பட்டது. திரு.கணபதி ஐயர் அவர்களின் மருமகன் L.L.Narayan அவர்கள் ரானே குழுத்தின் நிறுவனர் பெயரில் Madras Institute of Technology க்கு பல உதவிகளை செய்து அங்கு அவரது பெயரில் ஒரு அசையா இடத்தை உருவாக்கியுள்ளார். மேலும் மீனாட்சி கல்லூரிக்கும் மிகப் பெரியளவில் மாபெரும் உதவிகளை செய்துள்ளார். 1967 களிலேயே திரு.கணபதி ஐயர் அவர்கள் கல்வி குறைபாடுகள், வறுமை, நோய்கள் மற்றும் மக்களின் கஷ்டங்கள் போன்றவற்றை ஒழிக்க விடாபிடியாக போராடினார். அதுவே ரானேயின் முக்கிய கொள்கையாக மாறி பாரம்பரியமாக அரசு பள்ளிகளுக்கு உதவி செய்தனர். இதில்

DAV பள்ளிகள் தான் அதிகமாய் பயன்பெற்றன. இந்த Trust பின்னர் Rane Fountation என 2008 ல் பெயர்மாற்றம் பெற்றது. அதன்பிறகு இந்த குழுமத்தில் கல்விக்கு உதவும் நோக்கத்தை தாண்டி பிற தேவைகளுக்கும் உதவிட முன்வந்தனர். அதில் கல்வி தேவைகள் என்னவென்று ஆராய்ந்த போது தொழிற்கல்வியை சார்ந்த படிப்புகள் தான் மிக முக்கிய தேவையாக கிராமப்புறங்களில் இருந்தது. ரானே பல தொழிற்சாலை சார்ந்த நிறுவல்களை திருச்சியின் உள் மற்றும் வெளிப்புறங்களில் அமைத்துள்ளது. அது தொழிற்கல்விக்கு ஏற்ற அடித்தளமாகவும் அமைந்தது. 2011 ல் முழு முயற்சியோடு கல்லூரி நிறுவப்பட்டது. ஏழு ஏக்கரில் பல வசதிகளோடு அமைந்துள்ள இக்கல்லூரி பல மாணாக்கர்களின் சந்தோசமான வாழ்விற்கு உதவுகிறது. எடுத்துக்காட்டாக ரோபா, BMW Engine, Hyndai Car Transmission போன்றவற்றை கொண்டுள்ளது. இதுவரை 1200 மாணாக்கர்கள் இந்த வளாகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் பட்டம் பெற்றுள்ளார்கள். இதில் 70% மாணாக்கர்கள் இந்தியாவிலுள்ள மிகச்சிறந்த நிறுவனங்களிலும், பிற மாணாக்கர்கள் ரானே குழுமங்களிலும் பணி பெற்றுள்ளனர்

**முக்கிய திறன்கள்:**

முக்கிய திறன்களை கற்பிப்பது இந்நிறுவனத்தின் நோக்கமாக அமைந்துள்ளது. அவை அறிவு மற்றும் செயல்திறன்களும் உள்ளடக்கியது. இவை எம் ஆசிரியர்களின் கற்பித்தல் தரம் மற்றும் பயிற்சி பெறும் வசதிகள் என பலவித வசதிகள் உள்ளது. Rane தொழிற்சாலையின் கல்வி பங்கு மகத்தான சேவையாய் உள்ளது. Rane நிர்வாகிகளும் online வகுப்புகள் நடத்தி வருகின்றனர். அதில் காலநிர்வாகம், நிபுணத்துவம், நன்னடத்தை, மொழி ஆளுமை, தொழில் முனைவு, மதிப்புக்கல்வி போன்றவை கற்றுகொடுக்கப்படுகின்றன. இவ்வனைத்தும் நல்ல முறையில் பயின்று நல்ல குடிமகன்களாக தகுதியுற்று சமுதாயத்திற்கு நல்ல மாற்றத்தின் உருவாக்கும். இந்த பயிற்சி மறுபயிற்சியை வேலையிடங்களில் தவிர்க்க பெறுமளவில் உதவும். தமிழ்நாட்டிலுள்ள 480 Polytechnic கல்லூரிகளில் ரானே Polytechnic கல்லூரி NBA தரச்சான்றிதழை பெற்றுள்ளது. 2018 ல் பெற்ற அந்த தரமதிப்பீட்டின் மூலம் அக்கல்லூரியின்

தரம் உயர்ந்துள்ளதை காண முடிகிறது. அன்று மாணவர் சேர்க்கைக்காக பிரச்சாரம் செய்த நிலையிலிருந்து இன்று சேர்க்கைக்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. நம் முன்னாள் மாணவர்கள் தற்போது பல்வேறு நிறுவனங்களில் முதன்மையான பதவிகளில் பணிபுரிகின்றனர். இவையே அந்த நிறுவனம் சிறப்புமிக்க செயல்படுகிறது என்பதின் சாட்சியாக உள்ளது. நல்ல அதிகதரமிக்க பள்ளிக்கூடம் என்பது கண்டறியப்பட்ட தேவையாய் திருச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் தேவைப்பட்டது. அதனை ஈடுசெய்யும் வகையில் தான் 2018 ல் ரானே பவுண்டேசன் சார்பில் ரானே வித்யாலயா உருவானது. இப்பள்ளியின் பாடப்பிரிவுகள் மற்றும் பாடத்திட்டங்கள் அனைத்தும் அங்குள்ள பெற்றோர் மற்றும் குழந்தைகளில் ஆசைகளை முழுமையாக நிறைவு செய்யும்படி உருவாக்கபட்டவை. இப்பள்ளியை சுற்றியுள்ள 10 கிலோ மீட்டர் வரையிலான கிராமங்களை பள்ளிக் கல்வியின் மூலமாக உயர்வடைய செய்வது தான் இதன் நோக்கமாகும். தொழிற்நுட்பகல்வியை பொறுத்தவரையில் அதிக ஆழ்சிந்தனை கொண்டு வடிவமைத்தது கல்லூரி வளாகம். இதன் நோக்கம் நல்ல மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான கல்வி சூழலை மாணவர்களுக்கு உருவாக்கி கொடுப்பதே ஆகும். இரண்டு நிறுவனங்களும் அர்ப்பணிப்புடன் செயல்படகூடிய ஊழியர்களை மதிப்பீட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து பணியில் அமர்த்தியுள்ளது. மாணவர்களுக்கு மிக உயர்தர கல்வியை மிக குறைந்த கட்டணத்தில் கொடுத்து வருகின்றன. கிராமப்புற மாணாக்கர்களும் கணிணி யுகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதற்கு ரானே கல்வி நிறுவனங்களே உதாரணம்.